# Halloween கொண்டாடுவதில் என்ன தவறு?

உங்களுக்கு எப்பொழுதாவது Halloween கொண்டாடுவது தவறு என தோன்றியதுண்டா? சிந்தியுங்கள். இந்த வித்தியாசமான வழக்கத்திற்கு மாறுபட்ட அலங்காரத்தில் மாயமும் பேய்த்தன்மையும் (witches, ghouls, vampires போன்ற உருவங்கள் நிச்சயமாக கிறிஸ்தவ பாத்திரம் அல்ல) சாத்தானின் அதிகார சக்தியும் இந்த கொண்டாட்டத்தில் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ஓங்கி நிற்கிறது.

ஒவ்வொரு மனப்பூர்வமான கிறிஸ்தவனும் அறிந்துகொள்ளக் கூடிய விவரங்கள் இந்த பிரசுரத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த கொண்டாட்டத்தின் சரித்திரத்தை மதசார்பாகவும் உலகப்பிரகாரமாகவும் சிறிது தெரிந்துகொள்வோம். இதன் முழுமையான உண்மையையும் இதன் தோற்றத்தின் தன்மையையும் தெரிந்துகொண்டீர்களானால் நீங்கள் நிச்சயம் இதிலே பங்கு கொள்ளமாட்டீர்கள் என நம்புகிறோம். "கனியற்ற அந்தக்காரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்துகொள்ளுங்கள்." - எபேசியர் 5: 11.

1. இந்த Halloween மதசார்பற்ற இரகசியமான முறையில் உருவானது.
இந்த கொண்டாட்டம் Ancient Druids என்ற மாய மதத்தினரால் உருவாக்கப்பட்டது.

The American Peoples Encyclopedia இந்தவிதமாக விவரிக்கிறது:
Halloween: அக்டோபர் மாதம் கடைசி நாள், முதல்நாளான All Saints Day in the Christian Church. ஆனால் இந்த Halloween உண்மையாக தோன்றியது கிறிஸ்தவ காலத்திற்கு முற்பட்ட தேதியில். Druids என்று சொல்லக்கூடிய ஒரு மதநம்பிக்கையற்ற ஒரு பிரிவினரால், இங்கிலாந்து, அயர்லாந்து... பிரதேசங்களில் அக்டோபர் கடைசி நாளில் Festival of Samhain எனக் கொண்டாடப்பட்டது. இந்த நாள் வருடத்திலே நல்ல ஆவிகளும் கெட்ட ஆவிகளும் பூமியில் அலைவதாக அவர்களால் கருதப்பட்டது. அந்த இரவில் பிசாசுகளும் மோகினிகளும் பெரும் அக்கினிக்குள் அழிக்கப்படும். எதிர்காலம் முன்குறிக்கப்படும். மந்திரவாதிகள் ஆகாயத்தில் அழிக்கப்படும். Celtic Calender படி இது வருடத்தின் கடைசி நாள், இந்த நாளில் மரணத்தின் கடவுள், மிருகங்களின் உடலில் புகுந்திருக்கும் ஆவிகளை ஒன்றுசேர்த்து, அடுத்த வருடத்தில் எந்த மாதிரியான உருவகத்தில் அந்த ஆவிகள் செல்லும் என்பதை தீர்மானிக்கும் நாளாக, Druids பிரிவினர் நம்பினர். முன்பு மனிதனாக இருந்து தீமையை விளைவிக்க பூனைகளாக மாற்றப்பட்டதாக அவர்கள் நம்புவதால் பூனையை அவர்கள் பூஜிக்கத் தக்கதாகவும் கருதினார்கள். ரோமர்கள் இங்கிலாந்தை ஆண்ட காலத்தில் Druidsகள் தள்ளப்பட்டவர்களாக இருந்தபோதிலும் இந்த Halloween கொண்டாடும் வழக்கம் அயர்லாந்து, ஸ்காட்லாந்து, இங்கிலாந்திலும் பரவிற்று. பழங்கள், பதப்படுத்தப்பட்ட பழங்கள் பயன்படுத்துவது, Pomona (the goddess of the fruit if trees) என்று சொல்லக்கூடிய ரோமருடைய விழாவிலிருந்து கலந்துள்ளது. பிற்காலத்தில், அமெரிக்காவில் குடியேறியவர்கள் இந்த பழக்கத்தை அமெரிக்காவுக்கு கொண்டுவந்தார்கள். நவீன Halloween parties,முகமூடிகள், விளக்குகள், "trick or treat" போன்றவைகள் சூனிய சக்தியின் முந்தைய நம்பிக்கைகள்.
இந்த நாள் Druid பரம்பரையில் இருந்து பிறந்தது என்றும் அவர்கள் இதை Samhain என்று சொல்வார்கள். அதற்கு மரணத்தின் கடவுள் என்பது பொருள். (ஒரு பெரிய பிசாசு).

இந்த அக்டோபர் 31ந் தேதியில் இறந்தவர்கள் மயானத்திலிருந்து எழுந்து வெளியில் தெருக்களில் திரிவார்கள் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருந்தது. இதன் அடிப்படையில்தான் இறப்பின் அடையாளங்கள் இந்த பண்டிகையில் காணப்படுகின்றன. எலும்புக்கூடுகள், பேய் உருவங்கள், இடுகாடு அமைப்பு, சவப்பெட்டிகள், கல்லறைச் சின்னம் போன்ற அடையாளங்கள் இதில் காணப்படுவதின் நோக்கம் இதுவே.

இந்த இரவில் ஒரு இறந்த ஆவி உங்களையோ உங்கள் வீட்டையோ அணுகும்போது, நீங்கள் கேக், Cookies போன்ற ஒன்றைக் கொடுத்து அதை சமாதானப்படுத்த வேண்டுமென்பது Druid ன் மூடநம்பிக்கை. இதுதான் இன்றைய Halloween candiesகான மூலகாரணம். இந்த மதநம்பிக்கையற்ற மூடநம்பிக்கைகள் அடிப்படையில உள்ள பிசாசின் விடுமுறையான இந்த கொண்டாட்டம் சிறிது சிறிதாக நமது சமூகத்தை ஊடுருவி தற்சமயம் திருச்சபைகளில் கிறிஸ்தவர்களும் சந்தோஷத்துடன் கொண்டாடும் அளவிற்கு வந்துவிட்டது. இந்த கொண்டாட்டம் முழுமையாக புறமத்தினரின் மூடநம்பிக்கையில் அடிப்படையில் அமைந்ததே.

Students Encyclopedia இவ்விதமாக விவரிக்கிறது:

Halloween கொண்டாட்டத்தின் பல வழக்கங்களும், மூடநம்பிக்கைகளும் 1000 வருடங்களுக்கு பழமையானது. இந்த நம்பிக்கைகளும், கெட்ட ஆவிகளும் பழங்காலத்திய Druid festival of Samhain லிருந்து வளர்ச்சி பெற்றது. இந்த விழாவின்போது இறந்தவரின் ஆவிகள் அவரது உறவினர்கள் வீட்டிற்கு திரும்பும். இந்த ஆவிகளை திசைதிருப்ப பெரிய தீபங்கள் கொழுத்தப்படும். சூனியக்காரிகளும் மந்திரவாதிகளும் இந்த நாளில் அவர்கள் தொழுகைக்கு துடைப்பக்கட்டையுடன் செல்வார்கள்.

முடநம்பிக்கையுள்ள மற்ற மதத்தினர் அந்த காலத்தில், இந்த அக்டோபர் 31ந் தேதியில் வெளியில் செல்லும்போது, பிசாசு, பேய், சூனியக்காரி, மந்திரவாதி போல முகமூடி அணிந்து செல்லும்போது, வெளியிலே உலாவிக்கொண்டிருக்கும் கெட்ட ஆவிகளால் அவர்கள் தாக்கப்படாமல் இருப்பார்கள் என்று நம்பினார்கள். இந்த அடிப்படையில்தான் இன்று இந்த நாளில் முகமூடிகள் அணியும் பழக்கம் உள்ளது.

<u>ரோமன் கத்தோலிக்கரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.</u>

ரோமன் கத்தோலிக்கம் உலகத்திலே வல்லமையாக இருந்தபோது (அரசியல் ரீதியாகவும் மத ரீதியாகவும்) இம்மாதிரியான முடப்பழக்கங்களை நிறுத்த முயற்சித்தது. இருப்பினும் மற்ற மதத்தினரிடமும் மதசார்பற்ற மக்களிடமும் அவர்கள் மனதில் இநத பழக்கம் நன்கு பதிந்துவிட்டதால், 9ம் நூற்றாண்டிலே கத்தோலிக்க திருச்சபை இதற்கு பெயர் மாற்றம் செய்து கிறிஸ்தவ முக்கியத்துவத்தை கொடுத்தது. இந்த Druid Festival of Death என்பது "All Saints Day" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. கத்தோலிக்க காலண்டரில் குறிக்கப்படாத எல்லா Saintsகளையும் கௌரவிக்கும்பொருட்டும் அவர்களை நினைவுகூறும் பொருட்டும் இந்த நாளை நியமித்தார்கள். அத்துடன் இறந்தவர்களை கௌரவிக்கவும் கல்லறைக்கு சென்று வரவும் நியமித்தார்கள். பெயரை மாற்றினாலும்

சாத்தானால் உருவாக்கப்பட்ட இந்த நாளின் பழக்கங்களும் கருத்துக்களும் இன்னும் அந்த புதிய பெயரில் ஈடுபட்டுத்தான் உள்ளது.

கத்தோலிக்க களைக்களஞ்சியம் கூட இதை ஒத்துக்கொள்கிறது:
அக்டோபர் 31 ந்தேதி "Feast of All Saints", Halloween பெயர் பழைய ஆங்கில முறையில் All Hallows' Eve, என்ற பெயரிலிருந்து வந்தது. இருப்பினும் இந்த ஐதீகம் புறமதத்தின்ரிடமிருந்து வந்தது. இந்த கொண்டாட்டத்திற்கு முக்கிய பழக்கங்கள் கிறிஸ்துவுக்கு முந்தைய Gaul என்ற பகுதியிலும் இங்கிலாந்திலும் இருந்த Druidic மதத்திலிருந்து வந்தது. பண்டைய இங்கிலாந்தவர்கள் சூரியக்கடவுளை கௌரவிக்க பெருந்தீ ஏற்படுத்தி வெளிச்சத்தின் முலம் கொண்டுவரப்படும் அறுவடைக்கு மரியாதை செலுத்தவும் குளிர்காலம் ஆரம்பமாவதை குறித்தும் செய்தார்கள். Samhain என்று சொல்லக்கூடிய மரணத்தின் கடவுளுக்கும் அவர்கள் மரியாதை செலுத்தினார்கள். இந்த நாளில் இறந்தவர்களின் ஆவி அவர்களுடைய பாவத்திற்கு ஏற்ப விலங்குகளின் உடலில் புகுந்து கொள்ளும் நாளாகவும் இது கருதப்பட்டது.

இந்த நாளில் பேய்களும், சூனியங்களும், கெட்ட ஆவிகளும் பூமியில் ஆரவாரத்துடன் உலாவும் என்பது Druid மக்களின் நம்பிக்கை. இந்த ஆவிகளால் நமக்கும் நம் மக்களுக்கும் ஏதும் துன்பம் வராமல் இருக்க உணவுகளையும் தின்பண்டங்களையும் கொடுப்பார்கள்.
மக்கள் இந்த நாளில், வித்தியாசமான சத்தங்களும் வியப்பளிக்கும் செயல்களும் தோற்றத்தில் எப்பொழுதும் கூட்டமாக செல்லுவது அவர்கள் பாதுகாப்புக்காக ஏற்படுத்திக் கொண்டார்கள். இதுபோன்ற பழக்கத்தை, முகமூடி அணிவது, the trick or treat, தீமூட்டுவது, even jack-o-lantern (found throughout central Europe at Halloween). இன்றைய நாள் கொண்டாட்டத்திலும் காணலாம்.

Halloween நூறு விகிதம் மாயையையான ஒன்று என்பதற்கு இதுவே வெளிப்படையான விளக்கம்.

இதை படிக்கும் சகோதரரே/சகோதரியே, கடவுள் இப்படிப்பட்ட உலகப்பிரகாரமான கொண்டாட்டங்களிலும், புறமத்தினருடைய மாயமான இந்த வழக்கங்களிலும் மூடநம்பிக்கைகளிலும் பங்கெடுக்கம் திருச்சபைகளை கடவுள் பிழை பொறுப்பார் என நாம் அற்பமாக எண்ணுகிறோமா?

வேதம் இந்த விஷயத்தில் மௌனமாக இருக்கவில்லை:
"புறஜாதிகளுடைய மார்க்கத்தைக் கற்றுக்கொள்ளாதிருங்கள்;..... ஜனங்களின் வழிபாடுகள் வீணாயிருக்கிறது:.... " - எரேமியா 10: 2,3
உபாகமம் 18: 9 சொல்லுகிறது:
**"உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்தில் நீ போய்ச் சேரும்போது, அந்த ஜாதிகள் செய்யும் அருவருப்புக்களின்படி செய்யக் கற்றுக்கொள்ள வேண்டாம்."**

இந்த Halloween நாளின் பூர்வீகத்தைப் பற்றி நம்முடைய மனதிலே இந்த சந்தேகமுமில்லை. இது மாயையின் மூலக்கூறு. சாத்தானின், சூனியத்தின் மதமான Druids அடிப்படையில் வந்தவை.

மத்தேயு 7: 17-18 லே இயேசு சொல்கிறார்:
"....கெட்ட மரமோ கெட்ட கனிகளைக் கொடுக்கும். நல்ல மரம் கெட்ட கனிகளைக் கொடுக்கமாட்டாது: கெட்ட மரம் நல்ல கனிகளைக் கொடுக்கமாட்டாது."

கெட்ட மரமோ அல்லது அதன் வேரோ நல்லது எதையும் விளைவிக்க முடியாது என இயேசு சொல்கிறார். அப்படியானால் நிச்சயமாக, இந்த தூய்மையற்ற, தீமையான, சாத்தானின் உருவகமான Halloween எந்தவிதத்திலும் நல்லதைக் கொண்டுவராது.

ரோமர் 11: 16 உறுதிப்படுத்துகிறது:
"...வேரானது பரிசுத்தமாயிருந்தால், கிளைகளும் பரிசுத்தமாயிருக்கும்."

அதற்கு எதிர்பதமானதும் உண்மையன்றோ! வேரானது கெட்டதானால், அதன் கிளைகளும் கெட்டதே. உருவாக்கம் மதசார்பற்றதாயிருந்தால், அதன் கொண்டாட்டங்களும் அப்படியே.
அன்பான கிறிஸ்தவர்களே: கிறிஸ்துவின் பிள்ளைகளாயிருக்கும் நீங்கள், இந்த மதநம்பிக்கையற்றவர்களின் கொண்டாட்டத்தில் ஈடுபடலாமா?

<u>2. இது சாத்தானை மகிமைப்படுத்துகிறது.</u>

இப்படி தேசமும் மற்றைய உலக பகுதிகளும் இந்தமாதிரி பேய்கள், பிசாசு, சூனியம், கெட்ட ஆவி போல் அலங்கரித்து கொண்டாடுவதால் சாத்தானின் சக்தி பிரகாசம் அடைகிறது.
சாத்தான் காரியங்களிலும் மாந்திரீகம் செய்வதிலும் ஈடுபடுபவர்களுக்கு இந்த இரவு மிக முக்கியமானது என்பதை மாய வித்தை நன்றாய் தெரிந்த எவரும் உங்களுக்கு சொல்லக்கூடும்.
சாத்தானின் சக்தி உச்சத்தில் பிரகாசப்படுவதால், சில வசீகர சக்திகள் Halloween இரவிலே மட்டும் கூடக்கூடியதாக இருக்கும். கிறிஸ்தவர்கள் இதில் பங்கு கொள்ளும்போது சாத்தான் மிகவும் மகிழவும் பெருமையும் படக்கூடும். நீங்கள் அதை வணங்கும்போது, நீங்களும் அதன் மாதிரியை பின்பற்றுகிறீர்கள்.

பவுல் எபேசியர் 5: 1ல் இப்படியாக எச்சரிக்கிறார்:
"..நீங்கள் பிரியமான பிள்ளைகளைப்போலத் தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி,"
நாம் ஆண்டவர் கிறிஸ்து இயேசுவின்மேல் அன்பு வைத்து வணங்கும்போது, இயற்கையாக நாம், அவரின் சாயலாகிறோம். அவருடைய கற்பித்தலையும் அவருடைய புனிதத்தையும் நாம் கடைபிடிக்கிறோம். அதேபோல், நாம் சாத்தானின் அல்லது அதுபோன்ற அந்தகார காரியங்களிலும், கொண்டாட்டங்களிலும், விழாக்களிலும் கலந்துகொள்ளும்போது நாமும் அந்த வணக்கத்திற்கு ஒத்தவர்களாக ஆகிறோம்.

<u>Halloween பலி</u>

பலவித இரத்தப்பலிகள் இந்த நாளில் சாத்தான், சூனியக்காரர்களின் ஊழியத்தில் செய்யப்படுகின்றன. பலவிதமான விலங்குகள் கொலைசெய்யப்படுகின்றன: அவற்றின் இரத்தம் சாத்தான் வழிபாட்டிலும், சடங்கிலும் ஊற்றப்படுகிறது, குடிக்கப்படுகிறது. மனித பலிகூட இங்கு அமெரிக்காவில் இடம்பெறுகிறது!. Bob Larson என்பவர் வெளியிட்ட

"Witchcraft and Halloween" பிரசுரத்தின்படி, நீங்கள் நினைப்பதற்கு மேலாக பழக்கங்கள் எல்லாம் நடைபெறுகின்றன!. இருப்பினும், கிறிஸ்தவர்கள் இந்த பேய்களுக்கும் சாத்தானுக்கும் பயப்படத்தேவையில்லை. சாத்தானின் வல்லமை ஓங்கி நிற்கும் இந்த நாளில்கூட நாம் பயப்படத் தேவையில்லை,

இயேசு சொல்கிறார்:

"இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன்: ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தாது." (லூக்கா 10: 19)

நாம் பயப்படத்தேவையில்லை என்றாலும், அறிவின்மையாக அல்லது குழந்தைத் தனமாக, கடவுளின் கட்டளையை மீறி இப்படியான நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளலாம் என நினைக்கக்கூடாது. நாம் கடவுளின் கட்டளைக்கு **கீழ்ப்படியும்போதுதான், நமக்கு சாத்தானை ஒடுக்க சக்தி உள்ளது !.**

இந்த மாதிரி காரியங்களில் ஈடுபட்டு, சாத்தானின் ராஜ்யத்தில் பிரவேசிக்கும்போது, வழக்கமாக தவிர்க்கமுடியாத சாத்தானின் விளைவுகளுக்கு ஆளாக நேரிடும்.

<u>வேதம் எச்சரிக்கிறது</u>

"பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள்." (எபேசியர் 4: 27)

"தெளிந்த புத்தியுள்ளவர்களாகயிருங்கள், விழித்திருங்கள்: ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்." (1 பேதுரு 5: 8)

மேலும் நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது, "பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்," என்றும், "நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி," எனவும், "அவன் கண்ணிக்கு நீங்கத்தக்கதாகவும்," எனவும் எச்சரிக்கிறது. மேலும், "சாத்தானாலே நாம் மோசம் போகாதபடிக்கு அப்படிச் செய்தேன்: அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே." எனவும் வேதம் கூறுகிறது.

(யாக்கோபு 4: 7, எபேசியர் 6: 11, II தீமோத்தேயு 2: 26, II கொரிந்தியர் 2: 11)

இது முக்கியமாக இல்லாமலிருந்தால், கடவுள் இந்த அளவிற்கு எச்சரிக்கையும் புத்திமதியும் அவருடைய திருச்சபைக்கு கூறுவாரா? இந்த கொண்டாட்டங்களில் நாம் கலந்து கொண்டு சாத்தானுக்கு இடம் கொடுக்கக்கூடாது.

அன்பான கிறிஸ்தவர்களே, இந்த உலகத்தின் இருளிலே நாம் வெளிச்சமாக இருக்கிறோம்.! நாம் இந்த உலகத்திலிருந்து தனிப்பட்டவர்களும் வித்தியாசமானவர்களுமாவோம்.! நாம் பூமிக்கு உப்பாக இருக்கிறோம்.!

இயேசு மேலும் கூறுகிறார்:

"..உப்பானது சாரமற்றுப்போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது...." (மத்தேயு 5: 13-16)

உப்பு உப்பாக இல்லாமல் இருந்தால் அதனால் என்ன நன்மை? அது பயனற்றதாக ஆகிவிடும்! எறிந்துவிடு என இயேசு சொல்கிறார்! அருமையான வாசகர்களே, கிறிஸ்தவனாக இருப்பது இந்த உலகத்திலிருந்து வித்தியாசப்பட்டதில்லையா?

(6)

இந்த Halloween நாளும் சேர்ந்து கொண்டாடுவதால், மத நம்பிக்கையற்றவர்கள், விக்கிரக ஆராதனைக்காரர்கள், மாயக்காரர்கள், புறமதத்தினர்கள் ஆகியோரிடமிருந்து நமக்கு எந்தவித வித்தியாசமும் இல்லாமல் போகிறதே! இதிலே பங்கு கொள்வதால் நமது இரட்சகரை நாம் இழக்கிறோம்.!
பவுல் சொல்கிறார்:
**"..நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்." (II கொரிந்தியர் 6: 17)**

3. இது மாயமானதை தீங்கில்லை என கருதுகிறது.

கிறிஸ்தவர்கள் வீடுகளிலும், பள்ளிக்கூடங்களிலும் , திருச்சபைகளிலும் இந்த நாளைக் கொண்டாடும்போது, குழந்தைகளுக்கு (பொதுவாக மற்றவர்களுக்கும்) இப்படிப்பட்ட சாத்தான், சூனியம், மாய சம்பந்தமான காரியங்கள் வேடிக்கைக்கும் கேளிக்கைக்கும் உள்ளது: அதில் எந்த தீங்கும் இல்லை என தவறாக நினைக்கத் தோணும். கொடிய விஷப்பாம்பைவிட தீங்கான இந்த மாய கேளிக்கைகள் தீங்கானதில்லை என எடுத்துக்கொள்ளப்படுகிறது.! கடவுள் இந்தக் காரியங்களை ஒருபொழுதும் கேளிக்கையாகவும் தீங்கில்லையென்றும் கருதவில்லை, அப்படியிருந்தும் நாம் ஏன் இந்த சாத்தானின் கேளிக்கையை தீங்கில்லை என எடுத்துக்கொள்கிறோம்?. **கர்த்தர் இதை ஒரு வெறுப்பூட்டக்கூடிய செய்கையாக கருதுகிறார்.** (உபாகமம் 18: 9-12, லேவியராகமம் 18: 24-30)

உங்கள் வீடுகளை இப்படி அலங்காரம் பண்ணும்போதும், குழந்தைகளை பிசாசு, சூனியக்காரனைப் போல அலங்கரிக்கும்போதும், நீங்கள் அவர்களுக்கு இப்படிப்பட்ட சூனியங்கள் சரியானது என்ற எண்ணத்தை உண்டாக்குகிறீர்கள். ஆனால் கடவுள் **சொல்கிறார், "சூனியக்காரியை உயிரோடே வைக்க வேண்டாம்."** (யாத்திராகமம் 22: 18)

பலவித திருச்சபைகளும் இதில் கலந்துகொள்வது எவ்வளவு வேதனையாக உள்ளது. அவர்களுடைய பள்ளிக்கூடங்கள் கூட, மற்ற மதசார்பற்ற பள்ளிக்கூடங்கள்போல Halloween parties நடத்துகிறார்கள். பலமுறை திருச்சபைகள் கூட முகமுடி அணியும் விருந்து கேளிக்கைகளில் பங்குகொள்ளுகிறது மிகவும் வேதனைக்குரியது. ஒரு சபையில் அந்த சபையின் போதகர் Dracula போன்று முகமுடி அணிந்து Halloween masquerade parties நடத்தினார்கள். ஒரு கிறிஸ்தவ பெண் அவர்கள் திருச்சபையின் Halloween night அன்று நடக்கும் Masquerade partyஐ பற்றி குறிப்பிடுகையில்: அவர்கள் Halloween கொண்டாடவில்லை என்றும் அவர்கள் கொண்டாடுவது Harvest Festival என்றும் விளக்கம் கொடுக்கிறார்கள். என்னுடைய கருத்து, "என்ன வித்தியாசம்?" உண்மையாக அந்த Harvest festival என்பது Halloween! எந்த வித்தியாசமும் இல்லை! நீங்கள் வேறு பெயரிட்டிருக்கலாம், இருப்பினும் நீங்கள் அதே கொண்டாட்டத்தைத்தான் கொண்டாடுகிறீர்கள்!, "இது கார் அல்ல, மோட்டார் வாகனம்" ("this is not a Car; it's an automobile!") என்று சொல்வதுபோல் உள்ளது.

பல கிறிஸ்தவர்கள் இந்த Halloween கொண்டாட்டத்தை தீங்கில்லை என எடுத்துக்கொண்டாலும், இந்த பழக்கத்தின் முடிவு உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடியதாக இருக்குமென வேதம் தெரிவிக்கிறது.

"அப்படியே சவுல் கர்த்தருடைய வார்த்தையைக் கைகொள்ளாமல், கர்த்தருக்குச் செய்த தன் துரோகத்தினிமித்தமும், அவன் கர்த்தரைத் தேடாமல் அஞ்சனம் பார்க்கிறவர்களைக் கேட்கும்படிக்குத் தேடினதினிமித்தமும் செத்துப்போனான்." (1 நாளாகமம் 10: 13)

4. இது அசுத்த ஆவியின் தோற்றமே.

1 தெசலோனிக்கேயர் 5: 22 லே நமக்கு இப்படியாக சொல்லப்பட்டிருக்கிறது:

"பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்."

உண்மையாக Halloween எல்லா அடையாளங்களும் கெட்ட ஆவியாகவே இருக்கின்றன.

Witches, Warlocks, imps, ogres, Vampires, monsters, ghosts, ghouls, goblins, etc.... இவை எல்லாம் கெட்ட ஆவியின் வருணணையே. இப்படியிருக்க, ஏன் அதுபோன்று உருவமிட்டு அதன் சாயலாக மாறுகிறீர்கள்? உங்கள் வீடு கடவுளுக்கு புனிதப்பட்டதாக இருக்கும்போது, ஏன் இப்படிப்பட்ட அலங்காரத்தால் அலங்கரிக்கிறீர்கள்?

நாம் கெட்ட ஆவியின் உருவத்தை எடுக்க, கடவுள் நம்மை நிச்சயமாக அனுமதிக்கவில்லை, ஆனால் இந்த மாதிரி உருவத்தை செய்வது, நிச்சயமாக நாம் அந்த கெட்ட ஆவிகளை எடுத்துக்கொள்வதாக உள்ளது.

சாத்தானின் அடையாளங்கள்

Halloween அடையாளங்கள் ஒவ்வொன்றும் ஏதோ ஒரு மாயத்தையும் சாத்தானின் கருத்தையும் விளக்குகிறது. உதாரணமாக,

The jack-0-lantern, ஒரு சாபத்தின் ஆவியாக பண்டைய மக்களின் அடையாளம். கருப்புப் பூனை வெதுகாலமாக சூனியத்திற்கு அடையாளமாகவும், பலவித மூடநம்பிக்கைகளுக்கு ஆதாரமாகவும் இன்னமும் விளங்குகிறது. சூனியக்காரர்கள் தற்சமயம் குற்றமில்லாததாக கருதப்படுகிறது. தொலைகாட்சியில் "Bewitched" and "I Dream of Jeannie (Genie)" போன்ற காட்சிகள் பிரபல்யமாகி வருகிறது. "இவையெல்லாம் தவிர்க்கப்படவேண்டியது என தெளிவாக வேதம் கூறுகிறது. இவையெல்லாம் கடவுளுக்கு வெறுப்பூட்டக்கூடியது!"

(யாத்திராகமம் 22: 18, உபாகமம் 18: 9-14, லேவியராகமம் 18: 24-30)

மரணத்தின் அடையாளமான, ghosts, shouls, monsters, skulls, skeletons, graveyards, coffins, tomb-stones, etc. இவை எல்லாம் கெட்ட ஆவிக்கு அடையாளங்கள்.! trick-or-treat ritual என்பதும் பயமுறுத்துதலின் அடையாளம்!. பலாத்காரத்திற்கு அர்த்தம் !. "நீங்கள் எங்களுக்கு கொடுங்கள்: அல்லது நாங்கள் உங்களுக்கு சூழ்ச்சி செய்வோம்!" .

Halloween நாளில் ஏற்படும் அழிவுகள்.

நல்ல சிறுவர்கள்கூட இந்த கெட்ட ஆவிகளின் விளைவால் நாச வேலைகளில் ஈடுபட அந்த ஆவிகளால் ஏவப்பட்டு, பல நாசவேலைகள் பொதுவாக நடைபெறுகிறது. இந்த நாட்களில் நாசவேலைகள் அதிகரிப்பதை, எந்த காவல் அதிகாரியும் சொல்லக்கூடும். இன்னும் மோசமான காரியமாக, விஷம் கலந்த இனிப்புக்களும், ஊசி அல்லது கத்தி போன்றவைகள் உள்ளே மறைக்கப்பட்ட பழங்களும் கொடுக்கப்படுவது அதிகமாக நடைபெறுவதே. யார்? சாத்தானே இந்த காரியங்களை ஏவுகிறான்?

5. இது கடவுளுக்கு கீழ்ப்படியாத ஒரு காரியம்!

(8)

5. இது கடவுளுக்கு கீழ்ப்படியாத ஒரு காரியம்!

பல இடங்களில் மேலும் மேலும் வேதம், இந்த மாதிரி காரியங்களை அனுமதிக்கவேண்டாம் என தெளிவாகக் கூறுகிறது: அதற்கு இந்த வசனங்கள் சாட்சிகள்: உபாகமம் 18: 9-14, யாத்திராகமம் 7: 11-12, 2 தீமோத்தேயு 3: 8, யாத்திராகமம் 22: 18, லேவியராகமம் 19: 26,31., 20: 6,27., 1 நாளாகமம் 10: 13-14, 2 ராஜாக்கள் 21: 5-6, ஏசாயா 2: 6, எரேமியா 27: 9-10, சகரியா 10: 2, மல்கியா 3: 5, அப்போஸ்தலர் 8: 9f., 16: 16f., 19: 19., கலாத்தியர் 5: 16-21, வெளிப்படுத்துதல் 21: 8., 22: 15. கவனமாக இந்த வசனங்களை படித்து சிந்தித்தீர்களேயானால், இந்த மாதிரியான காரியங்களில் ஈடுபடுதலைக் கடவுள் எல்லோருக்கும் கண்டனம் செய்கிறார் என்பதை தெளிவாக அறியலாம்.

Halloween கொண்டாடுவதில் என்ன தவறு? இதுபற்றி ஒவ்வொன்றும் தவறே. இது சாத்தானின் வல்லமை பிரகாசமடையச் செய்யும் ஒரு கொண்டாட்டம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நேசிக்கிற எவருக்கும், இந்த கொண்டாட்டத்தில் எதுவும் பங்கு இல்லை.!

"புறஜாதிகளுடைய மார்க்கத்தைக் கற்றுக்கொள்ளாதிருங்கள்: .....ஜனங்களின் வழிபாடுகள் வீணாயிருக்கிறது." (எரேமியா 10: 2-3)

"உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்தில் நீ போய்ச் சேரும்போது, அந்த ஜாதிகள் செய்யும் அருவருப்புக்களின்படி செய்யக் கற்றுக்கொள்ள வேண்டாம்." (உபாகமம் 18: 9)

"அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக்கொள்ளக் கடவோம்." (ரோமர் 13: 12)

"கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்துகொள்ளுங்கள்." (எபேசியர் 5: 11)

"நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும், பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள்: நாம் இரவுக்கும் இருளுக்கும் உள்ளானவர்களல்லவே." (1 தெசலோனிக்கேயர் 5: 5)

"அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக: நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது?...
கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள்......" (2 கொரிந்தியர் 6: 14-17)

"முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்: வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள்." (எபேசியர் 5: 8)

"ஆதலால், ஒருவன் நன்மைசெய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்." ( யாக்கோபு 4: 17)

--------- + ----------

(Russell K. Tardo என்பவர் எழுதிய "What's wrong with Halloween?" என்ற கட்டுரையின் தமிழாக்கம்.)

**TAMIL CHRISTIAN PRAYER CHURCH**
25 Sewells Rd.
Scarborough, ON M1B 3H2
Tel: (905) 820-9323
Web: tamilchristianprayer.org

8/8